1967 ஜூலை 18]

நிலையங்களிலும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. டி.டி.இ., டி.எச்.இ., டி.பி.ஐ., டி.எம்.இ., ஆகியவர்கள் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அளிக்கப்படுகிறது. மற்ற தனியார் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் அத்தகைய கடன் வசதி அளிப்பதுதான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தின்கீழ் உள்ள கல்வி நிலையங்களில் பயிலுகிறவர்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகையைத் திருப்பி வசூலிப்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. கடன் தொகை திருப்பி வராத நிலைமை, விட்டுவிட்டுத் தருகிற நிலைமை, படித்து முடிந்ததும் வேலையில் இருக்கிறார்களா இல்லையா, என்கிற தகவலை அறிந்துகொள்ள முடியாத நிலைமை, முகவரி அறிவிக்காத நிலைமை, இப்படிப் பல சங்கடங்கள் இதிலே இருப்பதால்தான், இதை நம்முடைய அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிற நிறுவனங்களைப் பொறுத்து மட்டும் வழங்கிவிட்டு, தனியார்த் துறை நிறுவனங்களில் புகுத்துவதில் காலதாமதம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

*398 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சிப் பள்ளியில் 1965–66, 1966–67 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

(இ) இவைகளுக்காக வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தொழிற்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், அங்கு பயிற்சி பெறுபவர்கள் பயிற்சிக் காலத்தில் பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்பட்டவை. ஆதலால், அந்த மாதிரி உருவங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்ட மூலப் பொருள்களின் விலை, அங்கு செய்யப்பட்ட முழுமைப் பொருள்களின் விலையெனக் கொள்ளப்படுகிறது. இதற்காக வாங்கப்பட்ட மூலப்பொருள்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூ.	பை.
1965–66-ம் ஆண்டு	1,371	40
1966–67-ம் ஆண்டு	908	26

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, தொழிற்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பொருள்கள் அங்கே பயிற்சிக்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் கூட, அந்தப் பொருள்கள் விற்கப்படுகின்றன. அந்தப் பொருள்கள் விற்கப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் செய்யப்படுகிற பொருள்கள் விற்பனைக்காக என்று கருதிச் செய்யப்படுவதில்லை. அங்கே பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்படுகின்றன. அவை பிறகு விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. விற்பனைக்கு வைக்கும் போது, மூலப் பொருள்கள் என்ன விலைக்கு வாங்கப்பட்டனவோ அதே விலைதான், காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷனுக் கணக்கிடப்பட்டு விற்கப்படுகிறது. இரண்டு ஆண்டுக்காலம் பொருள்கள் விற்கப்படாமல் இருந்தால், 25 சதவிகிதம் கழித்துக்கொடுத்து, மறுபடியும் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்யப்படுகிறது. மறுபடியும் ஓரளவு விற்பனை ஆகாமல் இருக்குமானால், மேற்கொண்டு 25 சத வீதம் கழிவு தரப்படுகிறது. அதற்குப் பிறகும் அந்த மாதிரிப் பொருள்கள் விற்பனை ஆகாமல் இருக்குமானால், பிறகு அவைகளெல்லாம் ஏலம் விடப்படுகின்றன. அந்த வகையிலே சில பொருள்கள் மட்டும் ஏலம் விடப்படுகின்றன. இந்தப் பொருள்கள் செய்வதற்காக 1965–66-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மதிப்பு ரூ. 1,371·40. 1966–67-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின்

மதிப்பு ரூ. 908·26. பொருள்களை விற்றுவந்த விவரம் இல்லை. இரண்டு வகைத் திட்டங்களின் கீழ் வந்த பொருள்கள் மட்டும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இந்தப் பொருள்கள் விற்பதிலே அங்கிருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர்கள் "மிஸ்யூஸ்" பண்ணினார்கள் என்ற புகார் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எவ்வித புகாரும் வரவில்லை. அதுபற்றி கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 399வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாகபட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளியில் கடந்த இரண்டாண்டுகளாக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தகராறுகள் காரணமாக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதனை ஒழுங்குபடுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர் மாணவர்களிடையே சச்சரவு இருந்தது உண்மை. ஆனால் பள்ளியில் பயிற்சி பாதிக்கப்படவில்லை.

(இ) சச்சரவு பற்றி விசாரணை செய்யப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்ட சில ஆசிரியர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களின் இல்லங்களுக்கு மராமத்து.

* 400 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கனம் முதல் அமைச்சர், கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், கனம் அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு கட்டடம் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சபை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : On a point of order, Sir. A similar question was answered yesterday in the Upper House. Whether it is Lok Sabha or Rajya Sabha or Lower House or Upper House, the normal convention is that, when an answer is ready, it should first be placed before the Lower House. Obviously the answer was ready long ago. It should be placed here first and then only it should be placed in the Upper House. That has been the convention. I wish to draw the attention of the Chair to it.

Mr. SPEAKER : As the Hon. Member has drawn the attention of the Chair, I would ask him to leave it at that, because the listing of the questions is the responsibility of the Chair and not of the Minister.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகளைச் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கஅதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா ? அப்படி அவர்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்

---

a 664–668-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.